திருநெல்வேலி மாநகராட்சி

**2019ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 30ம் நாள் வெள்ளிக்கிழமை மாலை 11.30 மணிக்கு திருநெல்வேலி மாநகராட்சி வ.உ.சி. கட்டிடத்தில் வைத்து நடைபெற்ற மாமன்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்**

**1)** திருநெல்வேலி மாநகராட்சி மேலப்பாளையம் மண்டலத்தில் கீழ்க்காணும் பணிகளுக்கு EMD தொகை ஒப்பந்ததாரரால் செலுத்தப்பட்டுள்ளதனை திரும்ப வழங்க கேட்டு சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரர் M/s NHA Associates நிறுவனத்தால் **08.04.2019**ல் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பம் மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| Sl.No. | Name of work | EMD (Rs.) | Register details |
|---|---|---|---|
| 1 | Providing Plastic road at Anbu Nagar Kamarajar Salai in Ward No.26 | 42000 | 2012-13 MPM Lapsed Deposit Vol. II P.No.15 |
| 2 | Providing BT surface at BBC Colony in Ward No.28 | 20000 | 2012-13 MPM Lapsed Deposit Vol. II P.No.21 |
| 3 | Providing BT surface at Usman Nagar in Ward No.28 | 21355 | 2012-13 MPM Lapsed Deposit Vol. II P.No.19 |
| | Total | 83,355 | |

அலுவலகக் குறிப்பு

மேற்காணும் தொகை காலங்கடந்த வைப்புத் தொகையாக உள்ளது. எனவே நகராட்சி நடைமுறை நூல் விதி எண் 7(10)(i)(ii)-ன்படி EMD தொகை ரூ.**83,355/–**மட்டும் ஒப்பந்ததாரார் M/s NHA Associates நிறுவனத்திற்கு திரும்ப வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் **38**

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

---

**2)** திருநெல்வேலி மாநகராட்சி திருநெல்வேலி மண்டல அலுவலகத்திற்குட்பட்ட வார்டு எண் **41–**ல் அமைந்துள்ள சண்டிகேஸ்வரர் தெருவில் உள்ள கட்டண கழிப்பிடம் மிகவும் பழுதடைந்து, பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. மேற்படி கட்டண கழிப்பிடத்தின் கழிவு நீர் வெளியே செல்ல இயலாத நிலையில் மேற்படி இடத்திலேயே சுகாதாரமின்றி தேங்கி நின்று பொது மக்களுக்கும், குறிப்பாக சுவாமி நெல்லையப்பர் கோவிலுக்கு வரும் பக்தர்கள் அதிக எண்ணிக்கையில் இருப்பதால் பெருமளவில் நோய் பரப்பும் நிலையில் உள்ளது.

இது தொடர்பாக பொது மக்களிடமிருநது புகார் மனுக்கள் பெறப்பட்டு அதனடிப்படையில் மேற்படி பகுதி சுகாதார ஆய்வாளர்கள், இளநிலைப் பொறியாளர்கள் மற்றும் மண்டல உதவி ஆணையாளரால் மேற்படி கட்டணக் கழிப்பிடம் நேராய்வு செய்யப்பட்டு, மேற்படி கட்டண கழிப்பிடத்தினை இடித்து அப்புறப்படுத்திவிட்டு புதிதாக கட்டண கழிப்பிடம் அமைக்க அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

திருநெல்வேலி அருள்மிகு சுவாமி நெல்லையப்பர் கோயில் தேரோட்டத்தின் போது மாநகராட்சி ஆணையாளர் அவர்களால் கட்டண கழிப்பிடத்தினை நேராய்வு செய்த போதும், மேற்படி கட்டணக் கழிப்பிடத்தின் கட்டிடம் மிகவும் பழுதடைந்தும், கழிவுநீர் செல்வதுமின்றி தேங்கி நின்றும், பொது மக்களுக்கு நோய் பரவும் நிலையில் சுகாதாரமின்றி உள்ளதனை கருத்திற்கொண்டும், அதனை அப்புறப்படுத்திவிட்டு புதிதாக கழிப்பிடம் கட்ட உரிய மதிப்பீடுகள் தயார் செய்யவும் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

மேலும் மேற்கண்ட கட்டண கழிப்பிடமானது 13.09.2016–ஆம் தேதி முதல் மூன்றாண்டு காலத்திறகு ஏலம் விடப்பட்டு, ஏல உரிமம் காலம் 12.09.2019ஆம் தேதியுடன் முடிவடைகின்றது. மேற்படி கட்டணக் கழிப்பிடத்தின் கட்டிடம் பொது மக்கள் பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளதனை கருத்திற் கொண்டு, மேற்படி கட்டணக் கழிப்பிடத்தினை 12.09.2019 முடிய உரிம காலம் முடிவடையும் வரையிலும் உரிமதாரருக்கு உரிமம் அனுபவிக்கவும், 13.09.2019 முதல் புதிய கட்டணக் கழிப்பிடம் கட்டி பயன்பாட்டிற்கு வரும் வரை இவ்வினத்தை ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோருவதிலிருநது தற்காலிகமாக நிறுத்தி வைக்கவும், மேற்கண்ட கட்டண கழிப்பிடத்தினை இடித்து அப்புறப்படுத்திய பின் புதியதாக கட்டண கழிப்பிடம் கட்டுவது குறித்தும் மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகின்றது.

அலுவலகக் குறிப்பு

சண்டிகேஸ்வரர் கட்டண கழிப்பிடமானது 13.09.2016ஆம் தேதி முதல் மூன்றாண்டு காலத்திற்கு உரிமம் விடப்பட்டு வரும் 12.09.2019ஆம் தேதியுடன் மூன்றாண்டு காலம் முடிவடைகிறது. எனவே மேற்கண்ட கட்டண கழிப்பிடத்திற்கு வரும் 13.09.2019ஆம் தேதி முதல் 12.09.2022 ஆம் தேதி முடிய 3 ஆண்டு காலத்திற்கு ஏலமிடப்பட வேண்டும். மேற்படி கட்டணக் கழிப்பிடத்தின் கட்டிடம் பொது மக்கள் பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளதை கருத்திற்கொண்டு, மேற்படி கட்டணக் கழிப்பிடத்தினை 12.09.2019 முடிய உரிம காலம் முடிவடையும் வரையிலும் உரிமதாரருக்கு உரிமம் அனுபவிக்கவும், 13.09.2019 முதல் புதிய கட்டணக் கழிப்பிடம் கட்டி பயன்பாட்டிற்கு வரும் வரை இவ்வினத்தை ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோருவதிலிருந்து தற்காலிகமாக நிறுத்தி வைக்கவும், மேற்கண்ட கட்டண கழிப்பிடத்தினை இடித்து அப்புறப்படுத்தி புதியதாக கட்டண கழிப்பிடம் கட்டுவதற்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 39

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

(ந.க.எண் அ1/1659/2019)

---

3) திருநெல்வேலி மாநகராட்சி நலச்சங்கங்கள் மூலம் துப்புரவு பணிகள் குடியிருப்போர் நலச்சங்கம் மூலம் 10 ஆண்டுகளாக ஒப்பந்த அடிப்படையில் நலச்சங்கங்களின் மேற்பார்வையில் துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தது. மேற்படி நலச்சங்கங்கள் ரத்து செய்யப்பட்டு 01.01.2018 முதல் மாநகராட்சி துப்புரவு பணிகள் மூலம் மாநகராட்சி மூலம் நடைபெற உத்திரவிடப்பட்டது. சுகாதார அலுவலர்கள் மற்றும் சுகாதார ஆய்வாளர்கள் தேவைப்பட்டியலின்படி துப்புரவு பணியாளர்களின பற்றாக்குறையை கருத்தில் கொண்டு சுயஉதவிக்குழு துப்புரவு பணியாளர்களின மேற்கண்ட பகுதிகளில் துப்புரவு பணிகளை மேற்கொள்ளுமாறு

தெரிவிக்கப்பட்டுள்ளது. தச்சநல்லூர் மண்டலத்திற்கு 19 நபர்கள் கொண்ட ஒரு சுயஉதவிக்குழுவும், பாளையங்கோட்டை மண்டலத்திற்கு 15 நபர்கள் கொண்ட இரண்டு சுயஉதவிக்குழுவும், மேலப்பாளையம் மண்டலத்திற்கு 17 நபர்கள் மற்றும் 16 நபர்கள் இரண்டு சுயஉதவிக்குழுவும் ஆக மொத்தம் 82 பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

மேற்கண்ட சுயஉதவிக்குழுக்களில் பணி செய்தமைக்கான மாதாந்திர தொகையான நாள் ரூ.339/– எனக் கணக்கிட்டு வழங்கப்பட்டு வருகின்றது. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை எண் M3/16361/2019, நாள் 02.07.2019 ஆணையில் தினஊதியம் 01.04.2019 முதல் 31.03.2020 முடிய உள்ள நாட்களுக்கு ரூ.359/– என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது,

எனவே இம்மாநகராட்சியில் துப்புரவு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள மேற்கண்ட சுயஉதவிக்குழுக்களை சேர்ந்த பணியாளர்களுக்கு 01.04.2019 முதல் நாள் ஒன்றுக்கு ரூ.359/– எனக் கணக்கிட்டு வழங்கிடவும், அதற்கான செலவினத்திற்கும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

அலுவலகக் குறிப்பு

அ) இம்மாநகராட்சியில் துப்புரவு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள சுயஉதவிக்குழுக்களுக்கு மாதாந்திர தொகையினை திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை எண் M3/16361/2019, நாள் ஒன்றுக்கு ரூ.339/–லிருந்து ரூ.359/– ஆக 01.04.2019 முதல் கணக்கிட்டு வழங்கிடவும் அதற்கான செலவினத்திற்கும் மாமன்ற அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 40

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

(எச்2/96/2018)

---

4) திருநெல்வேலி மாநகராட்சிக்கான உரிம இனங்களுக்கு அரசாணை எண் 78, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 25.05.2009–ன்படி 2019–2022ஆம் காலத்திற்கான மூன்று ஆண்டு காலத்திற்கு மேலப்பாளையம் மண்டல அலுவலகத்திற்குட்பட்ட வார்டு எண் 29–ல் அமைந்துள்ள ஆடறுப்பு மனையில் நிர்ணயிக்கப்பட்ட கட்டணம் வசூல் செய்யும் உரிம இனத்திற்கு 25.07.2019 அன்று ஏலம்/ஒப்பந்தப்புள்ளி நிர்ணயிக்கப்பட்டு 11.07.2019 தேதிய தமிழ்முரசு நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டது. மேலும் மாநகராட்சியின் நான்கு மண்டல அலுவலகங்களில் உள்ள விளம்பர பலகைகளிலும் ஏலம்/ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு பொது மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டது.

மேற்கண்டவாறு ஆடறுப்பு மனையில் நிர்ணயிக்கப்பட்ட கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு 25.07.2019 அன்று நடைபெற்ற ஏல/ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகளில் கீழ்காணும் விபரப்படி ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றது.

ஏல விபரம் (குறுமத்தொகை ரூ.6,65,000/–)

ஏலத்தில் இருவர் மட்டும் கலந்து கொண்டனர்

| வ. எண் | ஏலதாரர் பெயர் மற்றும் முகவரி | செலுத்திய வைப்புத் தொகை விபரம் | ஏலக்கேள்வி தொகை ரூ |
|---|---|---|---|
| 1 | திருமதி.எஸ்.பி.சாந்தி<br>5/9 பெருமாள் வடக்கு ரதவீதி<br>திருநெல்வேலி சந்திப்பு | வைப்புத் தொகை ரூ.165000 வங்கி காசோலை எண் 600144, நாள் 23.07.2019 சிட்டி யூனியன் வங்கி மற்றும் கூடுதல் வைப்புத் தொகைக்கு திருநெல்வேலி வட்டாட்சியரிடமிருந்து பெறப்பட்ட செல்வ நிலை மதிப்பு (Solvency Certificate) ரூ.33.00 இலட்சம் சான்று எண் TN 1720190314102, நாள் 27.03.2019 | ரூ.7,02,000/– |
| 2 | திரு.ப.மகாராஜா<br>30 அம்மன் கோவில் தெரு<br>பவுண்ட் ரோடு<br>மேலப்பாளையம் | வைப்புத் தொகை ரூ.165000 வங்கி காசோலை எண் 600145, நாள் 23.07.2019 சிட்டி யூனியன் வங்கி மற்றும் கூடுதல் வைப்புத் தொகைக்கு திருநெல்வேலி வட்டாட்சியரிடமிருந்து பெறப்பட்ட செல்வ நிலை மதிப்பு (Solvency Certificate) ரூ.33.00 இலட்சம் சான்று எண் TN 1720190314103, நாள் 27.03.2019 | ரூ.7,01,500/– |

ஒப்பந்தப்புள்ளி விபரம் – ஒப்பந்தப்புள்ளியில் எவரும் கலந்து கொள்ளவில்லை

மேற்காணும் உரிமம் தொடர்பாக வரப்பெற்ற ஏலக்கேள்வியினை ஒப்பிட்டு நோக்கியதில் திருமதி.எஸ்.பி.சாந்தி என்பவரின் ஏலக்கேள்வி ரூ.7,02,000/– (ரூபாய் ஏழு இலட்சத்து இரண்டாயிரம் மட்டும்) குறும தொகையை விட ரூ.37,000/– கூடுதலாக இருப்பதால் திருமதி.எஸ்.பி.சாந்தி என்பவரின் உச்சஏலக் கேள்வி தொகை ரூ.7,02,000/–ஐ ஏற்பது குறித்து மாமன்றத்தின் பார்வைக்கும் மற்றும் முடிவிற்கும்

அலுவலகக்குறிப்பு

பொருளில் காணும் விபரப்படி, மேலப்பாளையம் மண்டல அலுவலகத்திற்குட்பட்ட வார்டு எண் 29–ல் அமைந்துள்ள ஆடறுப்பு மனையில் நிர்ணயிக்கப்பட்ட கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு 25.07.2019 அன்று வரப்பெற்ற ஏலதாரர்களின் ஏலக்கேள்வியினை ஒப்பிட்டு நோக்கியதில் திருமதி.எஸ்.பி.சாந்தி என்பவரின் உச்ச ஏலக்கேள்வி ரூ.7,02,000/– (ரூபாய் ஏழுஇலட்சத்து இரண்டாயிரம் மட்டும்) குறும தொகையை விட ரூ.37,000/– கூடுதலாக இருப்பதால் திருமதி.எஸ்.பி.சாந்தி என்பவரின் உச்ச ஏலக்கேள்வி தொகை ரூ.7,02,000/– ஏற்று மேற்கண்ட உரிம இனத்திற்கான உரிம காலம் 31.07.2019 உடன் முடிவடைவதால் அதன் அத்தியாவசிய அவசரம் கருதி 27.07.2019 அன்று ஆணையாளர் மற்றும் தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று திருமதி.எஸ்.பி.சாந்தி என்பவருக்கு 01.08.2019 முதல் 31.07.2022 வரையிலான 3 ஆண்டு

காலத்திறகு நிர்ணயிக்கப்பட்ட கட்டணம் வசூல் செய்யும் உரிம ஆணை வழங்கப்பட்டுள்ளதை மாமன்றம் அங்கீகரிக்கலாம்.

தீர்மானம் எண் 41

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

(அ1/4009/2016–மே.பா.)

---

5) திருநெல்வேலி மாநகராட்சி, திருநெல்வேலி மண்டலத்தில் கீழ்க்காணும் பணிகள் மேற்கொள்ள 5% காப்புத் தொகை பிடித்தம் செய்யப்பட்டுள்ளதனை திரும்ப வழங்க கேட்டு ஒப்பந்ததாரர் M/s Gouse Constructions நிறுவனத்தால் 23.04.2019–ல் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பம் மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| Sl. No | Name of work | 5% RM | Register Details |
|---|---|---|---|
| 1 | Construction of CC drain and culvert from Nethaji road to Melakulavanigarpuram channel Ward.No.30 | Rs.93449/- | Lapsed 2014-15 P.No.35 |

அலுவலகக் குறிப்பு

மேற்காணும் 5% காப்புத் தொகை காலங்கடந்த வைப்புத் தொகையாக உள்ளது, எனவே நகராட்சி நடைமுறை நூல் விதி எண் 7(10)(i)(ii)–ன்படி 5% காப்புத் தொகை ரூ.934449/– மட்டும் ஒப்பந்ததாரர் M/s Gouse Constructions நிறுவனத்திற்கு திரும்ப வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 42

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

(மதிப்பீட்டு எண் 45/11–12–திலி)

---

6) திருநெல்வேலி மாநகராட்சி, மேலப்பாளையம் மண்டலத்தில் கீழ்க்காணும் பணிகள் மேற்கொள்ள 5% காப்புத் தொகை பிடித்தம் செய்யப்பட்டுள்ளதனை திரும்ப வழங்க கேட்டு ஒப்பந்ததாரர் திரு,A.இமாம் ஜாபர் அவர்களால் 23.03.2019–ல் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பம் மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| Sl. No. | Name of work | 5% RM | Register Details |
|---|---|---|---|
| 1 | Construction of drain at Narayanasamy koil street in Ward No.38 | Rs.13,013/- | 2013-14/I P.No.35 |
| 2 | Construction of drain & culvert at Anavaratha Vinayagar Koil Street in Ward No.50 | Rs.8,147/- | 2013-14/I P.No.25 |
| | Total | Rs.21,160/- | |

அலுவலகக் குறிப்பு

மேற்காணும் 5% காப்புத் தொகை காலங்கடந்த வைப்புத் தொகையாக உள்ளது, எனவே நகராட்சி நடைமுறை நூல் விதி எண் 7(10)(i)(ii)–ன்படி 5% காப்புத் தொகை ரூ.21,160/– மட்டும் ஒப்பந்ததாரர் திரு,A.இமாம் ஜாபர் –க்கு திரும்ப வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 43

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

(மதிப்பீட்டு எண் 62/12–13–மே.பா)

---

7) திருநெல்வேலி மாநகராட்சி, மேலப்பாளையம் மண்டலத்தில் கீழ்க்காணும் பணிகள் மேற்கொள்ள முன்வைப்புத் தொகை ஒப்பந்ததாரரால் செலுத்தப்பட்டுள்ளதனை திரும்ப வழங்க கேட்டு சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரர் திரு,எம்.குமார் அவர்களால் 22.04.2019–ல் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பம் மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| Sl. No. | Name of work | Amount Rs. | Register Details |
|---|---|---|---|
| 1 | Providing BT surface at Ram Nagar omitted area and KMA Nagar in Ward 26 | Rs.13,300/- | MPM 2010-11 Vol.II P.No.3 |
| 2 | Providing BT surface at St.Peters Street in Ward No.26 | Rs.13,300/- | MPM 2010-11 Vol.II P.No.9 |
| 3 | Providing BT surface at Sankar colony | Rs.15,000/- | MPM 2010-11 Vol.I P.No.38 |
| 4 | Providing BT surface at Thai Nagar in Ward No.29 | Rs.13,000/- | MPM 2010-11 Vol.I P.No.49 |
| 5 | Providing BT surface at Anayarkulam in Ward No.26 | Rs.14,500/- | MPM 2010-11 Vol.I P.No.45 |
| 6 | Providing BT surface at Xavier colony extension area in Ward No.28 | Rs.15,000/- | MPM 2010-11 Vol.I P.No.39 |
| 7 | Providing BT surface at Chidambara Nagar in Ward No.27 | Rs.12,100/- | MPM 2010-11 Vol.I P.No.33 |
| 8 | Providing BT surface at Eden Garden Eden city in Ward No.28 | Rs.10,700/- | MPM 2010-11 Vol.I P.No.32 |
| 9 | Providing BT surface at Soniya Nagar Thendral Nagar in Ward No.26 | Rs.11,000/- | MPM 2010-11 Vol.I P.No.40 |
| | Total | Rs.1,17,900/- | |

அலுவலகக் குறிப்பு

மேற்காணும் தொகை காலங்கடந்த வைப்புத் தொகையாக உள்ளது. எனவே நகராட்சி நடைமுறை நூல் விதி எண் 7(10)(i)(ii)–ன்படி முன்வைப்புத் தொகை ரூ.1,17,900/– மட்டும் ஒப்பந்ததாரர் திரு,எம்.குமார் அவர்களுக்கு திரும்ப வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 44

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

(மதிப்பீட்டு எண் 173/2009–10–மே.பா)

---

8) திருநெல்வேலி மாநகராட்சி, மேலப்பாளையம் மண்டலத்தில் கீழ்க்காணும் பணிகளில் முன்வைப்புத் தொகை ஒப்பந்ததாரரால் செலுத்தப்பட்டுள்ளதனை திரும்ப வழங்க கேட்டு சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரர் திரு.ஆர்.சிவகுமார் அவர்களால் 22.04.2019–ல் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பம் மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| Sl. No. | Name of work | EMD (Rs,) | Register Details |
|---|---|---|---|
| 1 | Providing BT surface at Canara Bank Colony in Ward 26 | Rs.10,000/- | MPM 2011-12/I P.No.41 |
| 2 | Providing BT surface at Xavier Colony Rose Nagar in Ward No.28 | Rs.11,000/- | MPM 2011-12/I P.No.40 |
| 3 | Providing BT surface at James Nagar Ward No.27 | Rs.12,000/- | MPM 2011-12/I P.No.40 |
| 4 | Providing BT surface at Hameempuram in Ward No.29 | Rs.13,500/- | MPM 2011-12/I P.No.40 |
| | Total | Rs.46,500/- | |

அலுவலகக் குறிப்பு

மேற்காணும் தொகை காலங்கடந்த வைப்புத் தொகையாக உள்ளது. எனவே நகராட்சி நடைமுறை நூல் விதி எண் 7(10)(i)(ii)–ன்படி முன்வைப்புத் தொகை ரூ.46,500/– மட்டும் ஒப்பந்ததாரர் திரு.ஆர்.சிவகுமார் அவர்களுக்கு திரும்ப வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 45

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

(மதிப்பீட்டு எண் 150/2008–09–மே.பா)

---

9) திருநெல்வேலி மாநகராட்சி, திருநெல்வேலி மண்டலம், வார்டு எண் 50, காந்திநகர், எஸ்.எம்.ஏ.நகர் பகுதியில் புதிய தெருவிளக்குகள் அமைக்க மேற்படி பகுதி குடியிருப்போர் நலச்சங்கம் சார்பாக கேட்டுக் கொண்டதின் பேரில் மேற்படி பகுதியில் 20 W LED தெருவிளக்குகள் 20 எண்ணம் அமைக்க தெருவிளக்குகளின் மதிப்பு மற்றும் மின்வாரிய

மதிப்பீட்டு கட்டணம் உட்பட உத்தேச செலவினம் ரூ.5.00 இலட்சத்திற்கு மாமன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்

அலுவலகக் குறிப்பு

பொருளில் குறிப்பிட்டுள்ளபடி பொது மக்களின் நலன் கருதி மேற்படி பகுதியில் 20 W LED தெருவிளக்குகள் 20 எண்ணம் அமைக்கவும், தெருவிளக்குகளின் மதிப்பு மற்றும் மின்வாரிய மதிப்பீட்டு கட்டணம் உட்பட உத்தேச செலவினம் ரூ.5.00 இலட்சத்திற்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 46

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

(இ1/4282/2018–திலி)

---

10) திருநெல்வேலி மாநகராட்சி, திருநெல்வேலி மண்டலம், வார்டு எண் 48, பேட்டை RMK விஸ்வநாதநகர் பகுதியில் புதிய தெருவிளக்குகள் அமைக்க மேற்படி பகுதி குடியிருப்போர் நலச்சங்கம் சார்பாக கேட்டுக் கொண்டதின் பேரில் மேற்படி பகுதியில் அதிக குடியிருப்புகள், சிறுவர் விளையாட்டு பூங்கா மற்றும் நவீன உரம் செயலாக்கும் மையம் அமைந்துள்ளதால் 40 W LED தெருவிளக்குகள் 23 எண்ணம் அமைக்க தெருவிளக்குகளின் மதிப்பு மற்றும் மின்வாரிய மதிப்பீட்டு கட்டணம் உட்பட உத்தேச செலவினம் ரூ.5.50 இலட்சத்திற்கு மாமன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.

அலுவலகக் குறிப்பு

பொருளில் குறிப்பிட்டுள்ளபடி பொது மக்களின் நலன் கருதி மேற்படி பகுதியில் 40 W LED தெருவிளக்குகள் 23 எண்ணம் அமைக்கவும், தெருவிளக்குகளின் மதிப்பு மற்றும் மின்வாரிய மதிப்பீட்டு கட்டணம் உட்பட உத்தேச செலவினம் ரூ.5.50 இலட்சத்திற்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 47

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

(இ1/3367/2018–திலி)

---

11) திருநெல்வேலி மாநகராட்சி, திருநெல்வேலி மண்டலம், வார்டு எண் 48, பேட்டை நரிக்குறவர் காலனி பகுதியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள நவீன மீத்தேன் சமையற்கூடம் மற்றும் சுகாதார வளாகம் உள்ள பகுதியில் போதிய வெளிச்சம் இல்லாததால் புதிய தெருவிளக்குகள் அமைக்க மேற்படி பகுதி குடியிருப்போர் நலச்சங்கம் சார்பாக கேட்டுக் கொண்டதின் பேரில் மேற்படி பகுதியில் 40 W LED தெருவிளக்குகள் 5 எண்ணம் அமைக்க தெருவிளக்குகளின் மதிப்பு மற்றும் மின்வாரிய மதிப்பீட்டு கட்டணம் உட்பட உத்தேச செலவினம் ரூ.2.00 இலட்சத்திற்கு மாமன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.

அலுவலகக் குறிப்பு

பொருளில் குறிப்பிட்டுள்ளபடி பொது மக்களின் நலன் கருதி மேற்படி பகுதியில் 40 W LED தெருவிளக்குகள் 5 எண்ணம் அமைக்கவும், தெருவிளக்குகளின் மதிப்பு மற்றும் மின்வாரிய மதிப்பீட்டு கட்டணம் உட்பட உத்தேச செலவினம் ரூ.2.00 இலட்சத்திற்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 48

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

(இ1/5056/2018–திலி)

---

12) திருநெல்வேலி மாநகராட்சி, திருநெல்வேலி மண்டலம், வார்டு எண் 45, பேட்டை திருத்து மற்றும் அரசரடி விநாயகர் கோவில் வடக்குத் தெரு பகுதியில் புதிய தெருவிளக்குகள் அமைக்க மேற்படி பகுதி குடியிருப்போர் நலச்சங்கம் சார்பாக கேட்டுக் கொண்டதின் பேரில் மேற்படி பகுதியில் 20 W LED தெருவிளக்குகள் 4 எண்ணம் மற்றும் 40 W LED தெருவிளக்குகள் 7 எண்ணம் அமைக்க தெருவிளக்குகளின் மதிப்பு மற்றும் மின்வாரிய மதிப்பீட்டு கட்டணம் உட்பட உத்தேச செலவினம் ரூ.4.00 இலட்சத்திற்கு மாமன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.

அலுவலகக் குறிப்பு

பொருளில் குறிப்பிட்டுள்ளபடி பொது மக்களின் நலன் கருதி மேற்படி பகுதியில் 20 W LED தெருவிளக்குகள் 4 எண்ணம் மற்றும் 40 W LED தெருவிளக்குகள் 7 எண்ணம் அமைக்கவும், தெருவிளக்குகளின் மதிப்பு மற்றும் மின்வாரிய மதிப்பீட்டு கட்டணம் உட்பட உத்தேச செலவினம் ரூ.4.00 இலட்சத்திற்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 49

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

(இ1/1927/2018–திலி)

---

13) திருநெல்வேலி மாநகராட்சி, திருநெல்வேலி மண்டலம், வார்டு எண் 48, பேட்டை சுத்தமல்லி ஸ்ரீநிவாசநகர் பகுதியில் புதிய தெருவிளக்குகள் அமைக்க மேற்படி பகுதி குடியிருப்போர் நலச்சங்கம் சார்பாக கேட்டுக் கொண்டதின் பேரில் மேற்படி பகுதியில் 20 W LED தெருவிளக்குகள் 3 எண்ணம் மற்றும் 40 W LED தெருவிளக்குகள் 1 எண்ணம் அமைக்க தெருவிளக்குகளின் மதிப்பு மற்றும் மின்வாரிய மதிப்பீட்டு கட்டணம் உட்பட உத்தேச செலவினம் ரூ.1.30 இலட்சத்திற்கு மாமன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.

அலுவலகக் குறிப்பு

பொருளில் குறிப்பிட்டுள்ளபடி பொது மக்களின் நலன் கருதி மேற்படி பகுதியில் 20 W LED தெருவிளக்குகள் 3 எண்ணம் மற்றும் 40 W LED தெருவிளக்குகள் 1 எண்ணம் அமைக்கவும்,

தெருவிளக்குகளின் மதிப்பு மற்றும் மின்வாரிய மதிப்பீட்டு கட்டணம் உட்பட உத்தேச செலவினம் ரூ.1.30 இலட்சத்திற்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 50

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

(இ1/1469/2018–திலி)

---

14) திருநெல்வேலி மாநகராட்சி, திருநெல்வேலி மண்டலம், வார்டு எண் 50, பழையபேட்டை சர்தார்புரம் வடக்கு மற்றும் அமராவதிநகர் பகுதியில் புதிய தெருவிளக்குகள் அமைக்க மேற்படி பகுதி குடியிருப்போர் நலச்சங்கம் சார்பாக கேட்டுக் கொண்டதின் பேரில் மேற்படி பகுதியில் 20 W LED தெருவிளக்குகள் 22 எண்ணம் அமைக்க தெருவிளக்குகளின் மதிப்பு மற்றும் மின்வாரிய மதிப்பீட்டு கட்டணம் உட்பட உத்தேச செலவினம் ரூ.6.00 இலட்சத்திற்கு மாமன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.

அலுவலகக் குறிப்பு

பொருளில் குறிப்பிட்டுள்ளபடி பொது மக்களின் நலன் கருதி மேற்படி பகுதியில் 20 W LED தெருவிளக்குகள் 22 எண்ணம் அமைக்கவும், தெருவிளக்குகளின் மதிப்பு மற்றும் மின்வாரிய மதிப்பீட்டு கட்டணம் உட்பட உத்தேச செலவினம் ரூ.6.00 இலட்சத்திற்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 51

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

(இ1/3372/2018–திலி)

---

15) திருநெல்வேலி மாநகராட்சி, மேலப்பாளையம் மண்டலம், வார்டு எண் 26, ராமசந்திரா நகர் மற்றும் ஆணையர்குளம் முதல் திருமால் நகர் வரை உள்ள மண் சாலையில் ஏற்கனவே அமைந்துள்ள 23 எண்ணம் மின்கம்பங்களில் தெருவிளக்குகள பொருத்த கேட்டு இப்பகுதியை சார்ந்த பொது மக்கள் நலச்சங்கம் சார்பாக கேட்டுள்ளனர். மேற்படி இடம் நேர் ஆய்வு செய்யப்பட்டது. ஆணையர்குளம் முதல் திருமால் நகர் வரை உள்ள மண் சாலையில் இரவில் மிகவும் இருள் சூழ்ந்து இருப்பதால் உடனடியாக தெருவிளக்குகள் பொருத்துவது அவசியமாகிறது. இப்பகுதிகளில் ஏற்கனவே அமைந்துள்ள 23 மின்கம்பங்களில் தெருவிளக்கு இணைப்பு வயர்கள் அமைத்து 23 எண்ணம் 20 W LED விளக்குகள் பொருத்திட ஆகும் செலவு மற்றும் தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கான உத்தேச செலவினம் தொகை ரூ.2,25,000/–த்திற்கு மாமன்றத்தின் அனுமதிக்கும் ஒப்புதலுக்கும்

அலுவலகக் குறிப்பு

திருநெல்வேலி மாநகராட்சி, மேலப்பாளையம் மண்டலம், வார்டு எண் 26, ராமசந்திரா நகர் மற்றும் ஆணையர்குளம் முதல் திருமால் நகர் வரை உள்ள மண் சாலையில் ஏற்கனவே அமைந்துள்ள 23 எண்ணம் மின்கம்பங்களில் 23 தெருவிளக்கு இணைப்பு வயர்கள் அமைத்து 23

எண்ணம் 20 W LED விளக்குகள் பொருத்திட ஆகும் செலவு மற்றும் தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கான உத்தேச செலவினம் தொகை ரூ.2,25,000/—த்திற்கு மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

தீர்மானம் எண் 52

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

(ந.க.எண் இ2/4668/2019—மே.பா)

---

16) திருநெல்வேலி மாநகராட்சி, மேலப்பாளையம் மண்டலம், வார்டு எண் 26, காருண்யாநகர், மேசியா நகர், தென்றல் நகர் மற்றும் ஜெஸ்லிநகர் பொதுமக்கள் நலச்சங்கம் சார்பாக வரப்பெற்ற மனுவில் மேற்குறிப்பிட்ட பகுதிகளில் புதிய தெருவிளக்குகள் அமைத்து தர கேட்டுள்ளனர். மேற்படி இடம் ஆய்வு செய்யப்பட்டது. இப்பகுதிகளில் ஏற்கனவே அமைந்துள்ள 17 மின்கம்பங்களில் தெருவிளக்கு இணைப்பு வயர்கள் அமைத்து 20 W LED விளக்குகள் பொருத்திட ஆகும் செலவு மற்றும் தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கான உத்தேச செலவினம் தொகை ரூ.2,00,000/—த்திற்கு மாமன்றத்தின் அனுமதிக்கும் ஒப்புதலுக்கும்.

அலுவலகக் குறிப்பு

திருநெல்வேலி மாநகராட்சி, மேலப்பாளையம் மண்டலம், வார்டு எண் 26, காருண்யாநகர், மேசியா நகர், தென்றல் நகர் மற்றும் ஜெஸ்லிநகர் ஆகிய பகுதிகளில் ஏற்கனவே அமைந்துள்ள 17 மின்கம்பங்களில் தெருவிளக்கு இணைப்பு வயர்கள் அமைத்து 20 W LED விளக்குகள் பொருத்திட ஆகும் செலவு மற்றும் தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கான உத்தேச செலவினம் தொகை ரூ.2,00,000/—த்திற்கு மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

தீர்மானம் எண் 53

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

(ந.க.எண் இ2/4668/2019—மே.பா)

---

17) திருநெல்வேலி மாநகராட்சி, மேலப்பாளையம் மண்டலம், வார்டு 26, சிவந்தி ஆதித்தனார் காலனி, வசந்தம் காலனி மற்றும் ஒருங்கிணைந்த தொழிலாளர் துறை அலுவலகம் முன்புறம் ஆகிய பகுதியில் மதிப்பிற்குரிய மாவட்ட ஆட்சியர் அவர்களின் அறிவுறுத்தலின்படியும் மற்றும் ஆணையாளர் அவர்களின் உத்திரவின்படியும் மேற்குறிப்பிட்ட இடம் ஆய்வு செய்யப்பட்டது. மேற்படி பகுதியில் ஏற்கனவே அமைந்துள்ள 6 மின்கம்பங்களில் தெருவிளக்கு இணைப்பு வயர்கள் இல்லாத காரணத்தினால் தெருவிளக்குகள் பொருத்தப்படாமல் உள்ளது. மேற்படி 6 மின்கம்பங்களில் தெருவிளக்கு இணைப்பு வயர்கள் அமைத்து 6 எண்ணங்கள் 20 W LED விளக்குகள் பொருத்திட தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கான செலவு மற்றும் விளக்குகள் பொருத்திட ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.75,000/— மாமன்றத்தின் அனுமதிக்கும், ஒப்புதலுக்கும்

அலுவலகக்குறிப்பு

திருநெல்வேலி மாநகராட்சி, மேலப்பாளையம் மண்டலம், வார்டு 26, சிவந்தி ஆதித்தனார் காலனி, வசந்தம் காலனி மற்றும் ஒருங்கிணைந்த தொழிலாளர் துறை அலுவலகம் முன்புறம் ஆகிய பகுதியில் ஏற்கனவே அமைந்துள்ள 6 மின்கம்பங்களில் தெருவிளக்கு இணைப்பு வயர்கள் அமைத்து 6 எண்ணங்கள் 20 W LED விளக்குகள் பொருத்திட தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கான செலவு மற்றம் விளக்குகள் பொருத்திட ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.75,000/–க்கு மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

தீர்மானம் எண் 54

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

(ந.க.எண் இ2/4965/2019–மே.பா.)

---

18) திருநெல்வேலி மாநகராட்சி, தச்சநல்லூர் மண்டலத்திற்குட்பட்ட தொண்டர் சன்னதி தெருவில் அமைந்துள்ள நவீன கட்டண கழிப்பிடத்தில் மாநகராட்சியால் நிர்ணயிக்கப்பட்ட கட்டணம் வசூல் செய்யும் உரிமம் திரு.சோலையப்பன் என்பவருக்கு 2016–2019 ஆண்டுகளுக்கு ஒப்படைக்கப்பட்டது. அன்னார் மூன்று ஆண்டுகளுக்கும் உரிமத் தொகை செலுத்தப்பட்டு 31.03.2019–ல் உரிமம் மாநகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்ட நிலையில், மேற்படியார் செலுத்திய ஏல முன்வைப்புத் தொகை ரூ.35,000/– (வங்கி வரைவோலை எண் 213188, நாள் 08.02.2016, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி) மற்றும் சால்வன்சிக்கு பதிலாக செலுத்தப்பட்ட கூடுதல் வைப்புத் தொகை ரூ.35000/– (வங்கி வரைவோலை எண் 213189, நாள் 08.02.2016, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி) ஆக மொத்தம் ரூ.75,000/– திரும்ப வழங்க கேட்டுள்ளார். உரிமதாரருக்கு வைப்புத் தொகை மற்றும் கூடுதல் வைப்புத் தொகை மொத்தம் ரூ.75,000/– திரும்ப வழங்குவது குறித்து மாமன்றத்தின் அனுமதிக்கு

அலுவலகக் குறிப்பு

தச்சநல்லூர் மண்டல அலுவலக தொண்டர் சன்னதி தெருவில் அமைந்துள்ள நவீன கட்டண கழிப்பிடத்தில் மாநகராட்சியால் நிர்ணயிக்கப்பட்ட கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு திரு.சோலையப்பன் என்பவருக்கு 2016–2019 முடிய உள்ள காலங்களுக்கு செலுத்தப்பட்ட வைப்புத் தொகையானது 02/2016–ல் உரிமதாரரால் செலுத்தப்பட்டு மூன்றாண்டுக்கு இத்தொகையானது காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேடு 2015–2016–ம் ஆண்டு பக்கம் எண் 17–ல் இருப்பில் உள்ளது. மூன்று ஆண்டுகளுக்கு மேலாகி காலங்கடந்த வைப்புத் தொகையாக உள்ளதால் நகராட்சி நடைமுறை நூல் விதி 7(10)(i)(ii)–ன்படியும், 2018–2019–ம் ஆண்டு தணிக்கை முடிவு பெறாத நிலையில் வைப்புத் தொகை ரூ.35,000/–ல் 40 விழுக்காடு தொகை ரூ.14,000/– பிடித்தம் செய்து மீதமுள்ள தொகை ரூ.21000/– மற்றும் கூடுதல் வைப்புத் தொகை ரூ.35,000/– ஆக மொத்தம் ரூ.56,000/–னை திரு.சோலையப்பன் உரிமதாரருக்கு திரும்ப வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 55

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

(ந.க.எண் அ1/2567/2019–தச்சை)

---

19) திருநெல்வேலி மாநகராட்சி பகுதிகளில் சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் ஏற்கனவே உள்ள (70 வாட்ஸ, 150 வாட்ஸ் மற்றும் 250 வாட்ஸ்) சோடியம் ஆவி விளக்குகளை கழற்றி அதற்கு பதிலாக புதிதாக LED விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளது;. மேலும், T5 விளக்குகள் மற்றும் CFL விளக்குகளை அகற்றி LED விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளது. மேற்படி கழற்றப்பட்ட தெருவிளக்கு பிட்டிங்குகள் அதிக வாட்ஸ் மின்திறன் கொண்டதாக இருப்பதால், மீண்டும் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ள மேற்படி பழைய மின்சாதன பொருட்களை 14.08.2019 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோருவதற்கு 26.7.2019—ல் ஆணையர் அவர்களிடம் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. அதன்படி, கழற்றப்பட்டுள்ள பழைய மின்விளக்குகள் மற்றும் உதிரி சாமான்களை விற்பனை செய்யும் பொருட்டு ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு தினபூமி நாளிதழில் 30.07.2019 அன்று பிரசுரம் செய்யப்பட்டு 14.08.2019 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிதாரர்கள் கலந்து கொண்டனர். ஆதன் விபரம் பின்வருமாறு:

| Sl. No | Description of materials | Rate Per material | Thiru.H. Nagoor Mohideen | M/s.Arul Traders | Thiru.M. Subra manian | M/s.Abhi Energy (P) Ltd. |
|---|---|---|---|---|---|---|
| 1 | Dispose the 250W Sodium Vapour Lamp fitting set including labour charges etc. (2471 Nos) | 275/Each | 310/Each | 315/Each | 276/Each | 310/Each |
| 2 | Dispose the 150W Sodium Vapour Lamp fitting set including labour charges etc. (1116 Nos) | 200/Each | 210/Each | 225/Each | 201/Each | 235/Each |
| 3 | Dispose the 70W Sodium Vapour Lamp fitting set including labour charges etc. (311 Nos) | 125/Each | 130/Each | 150/Each | 126/Each | 150/Each |
| 4 | Dispose the 4x24W fitting set including labour charges (490 Nos) | 90/Each | 100/Each | 100/Each | 91/Each | 115/Each |
| 5 | Dispose the 2x2W T5 fitting set including labour charges.(2 Nos) | 75/Each | 100/Each | 100/Each | 76/Each | 100/Each |
| 6 | Dispose the 400W Metal Lamp Fitting set including labour charges (8 Nos) | 375/Each | 400/Each | 400/Each | 376/Each | 400/Each |
| 7 | Dispose the 36W compact florescent lamp fitting set.(1No) | 50/Each | 50/Each | 100/Each | 51/Each | 75/Each |
| | **Total Contract Value** | 988900 | 1093250 | 1128615 | 993299 | 1134745 |
| | **Tender Percentage** | | **10.55% more** | **14.13% more** | **0.44% more** | **14.75% more** |

மேற்கண்டவாறு பெறப்பட்ட 4 ஒப்பந்தப்புள்ளிதாரர்களும் முன்வைப்புத் தொகையாக ரூ.9900/– வீதம் செலுத்தியுள்ளனர். மேற்படி பெறப்பட்ட 4 ஒப்பந்தப்புள்ளிகளில் M/s.ABHI ENERGY (P) LTD., Tirunelveli நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி மற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகளின் மதிப்பினை விட கூடுதலாகவும், துறையின் ஒப்பந்த மதிப்பினை விட 14.75% கூடுதலாகவும் (ஒப்பந்த மதிப்பு ரூ.11,34,745/–) உள்ளது. மேற்படி பழைய மின்சாதன பொருட்களை விற்பனை செய்வதற்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில், மதிப்பீட்டு விலைவிகிதத்தினை விட 14.75% கூடுதலாக (ஒப்பந்த மதிப்பு ரூ.11,34,745/–) இருப்பதாலும் மற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகளின் மதிப்பினை விட கூடுதலாக இருப்பதாலும் மேற்படி M/s.ABHI ENERGY (P) LTD., Tirunelveli நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஒப்புக்கொள்வது குறித்து மாமன்ற அனுமதிக்கு.

அலுவலகக்குறிப்பு:

பொருளில் கண்ட விபரப்படி, சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் ஏற்கனவே உள்ள (70 வாட்ஸ், 150 வாட்ஸ் மற்றும் 250 வாட்ஸ்) சோடியம் ஆவி விளக்குகளை கழற்றி அதற்கு பதிலாக புதிதாக LED விளக்குகள் மற்றும் T5 விளக்குகள், CFL மற்றும் குழல் விளக்குகளை அகற்றி LED விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளதால், கழற்றப்பட்ட தெருவிளக்கு பிட்டிங்குகள் அதிக வாட்ஸ் மின்திறன் கொண்டதாக இருப்பதால் மீண்டும் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ள மேற்படி பழைய மின்சாதன பொருட்களை விற்பனை செய்வதற்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் பெறப்பட்ட 4 ஒப்பந்தப்புள்ளிதாரர்களும் முன்வைப்புத் தொகையாக ரூ.9900/– வீதம் செலுத்தியுள்ளனர். மேற்படி பெறப்பட்ட 4 ஒப்பந்தப்புள்ளிகளில் M/s.ABHI ENERGY (P) LTD., Tirunelveli நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி மற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகளின் மதிப்பினை விட கூடுதலாகவும், துறையின் ஒப்பந்த மதிப்பினை விட 14.75% கூடுதலாகவும் (ஒப்பந்த மதிப்பு ரூ.11,34,745/–) உள்ளது. மேற்படி பழைய மின்சாதன பொருட்களை விற்பனை செய்வதற்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில், மதிப்பீட்டு விலைவிகிதத்தினை விட 14.75% கூடுதலாக (ஒப்பந்த மதிப்பு ரூ.11,34,745/–) இருப்பதாலும் மற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகளின் மதிப்பினை விட கூடுதலாக இருப்பதாலும், M/s.ABHI ENERGY (P) LTD., Tirunelveli நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை மாமன்றம் ஒப்புக் கொண்டு அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 56

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

---

20) அரசாணை எண் 145, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 21.09.2011–ன்படி திருநெல்வேலி மாநகராட்சியால் கோயம்புத்தூர் நகர்ப்புற பயிற்சி நிறுவனத்திற்கு செலுத்தப்பட வேண்டிய 2019–2020ம் ஆண்டுக்கான பங்குத்தொகை ரூ.3,00,000/–ஐ இயக்குநர், தமிழ்நாடு நகர்ப்புற பயிற்சி நிறுவனம், கோயம்புத்தூர் 11 அவர்களின் கடிதம் ந.க.எண் 648/2019/A2, நாள் 30.07.2019–ன்படி தமிழ்நாடு நகர்ப்புற பயிற்சி நிறுவனத்திற்கு செலுத்த மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

2019–2020ம் ஆண்டுக்கான பங்குத் தொகை ரூ.3,00,000/–ஐ தமிழ்நாடு நகர்ப்புற பயிற்சி நிறுவனத்திற்கு செலுத்த மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 57

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

(ந.க.எண் சி1/9496/2012)

---

21) திருநெல்வேலி மாநகராட்சி, தச்சை மண்டலத்தில் கீழ்க்காணும் பணிகள் மேற்கொள்ள ஒப்பந்ததாரரால் முன்வைப்புத் தொகை செலுத்தப்பட்டுள்ளதனை திரும்ப வழங்க கேட்டு சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரர் திரு.ஐ.கணபதி அவர்களால் 06.03.2019–ல் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பம் மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| Sl. No. | Name of work | Amount (Rs.) | Register Details |
|---|---|---|---|
| 1 | Construction of storm water drain at Melanatham main road in Ward.No.38 | 19,900 | MPM 2013-14 P.No.8 |
| 2 | Providing CC pavement at Karuppanthurai Amman Koil street, Ward No.38 | 22,400 | MPM 2014-15 P.No.17 |
| | Total | 42.300 | |

அலுவலகக் குறிப்பு

மேற்கண்ட விபரப்படி உள்ள முன்வைப்புத் தொகை காலங்கடந்த வைப்புத் தொகையாக ரூ.10000/–க்கும் அதிகமாக உள்ளது. எனவே நகராட்சி நடைமுறை நூல் விதி 7(10)(i)( ii)–ன்படி முன்வைப்புத் தொகை ரூ.42,300/– மட்டும் ஒப்பந்ததாரர் திரு.I.கணபதி அவர்களுக்கு திரும்ப வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 58

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

---

22) திருநெல்வேலி மாநகராட்சியில் கீழ்க்காணும் பணிகள் மேற்கொள்ள பட்டியலில் 5% RM தொகை பிடித்தம் செய்யப்பட்டுள்ளதனை திரும்ப வழங்க கேட்டு சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரர் M/s Sivabala Guru Construction நிறுவனத்தால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பம் மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| Sl. No. | Name of work | 5% RM Amount (Rs.) | Register Details |
|---|---|---|---|
| 1 | Supply & delivery of diesel engine, power chainsaw, torch light & hand gloves | 12,581 | Lapsed Register 2015-16 P.No.26 |

அலுவலகக் குறிப்பு

மேற்காணும் தொகை காலங்கடந்த வைப்புத் தொகையாக உள்ளது. எனவே நகராட்சி நடைமுறை நூல் விதி 7(10)(i)( ii)–ன்படி 5% RM தொகை ரூ.12,581/– மட்டும் ஒப்பந்ததாரர் M/s Sivabala Guru Construction நிறுவனத்திற்கு திரும்ப வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 59

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

---

23) திருநெல்வேலி மாநகராட்சி, தச்சை மண்டலத்தில் கீழ்க்காணும் பணிகளில் 5% காப்புத் தொகை பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்டுள்ளதனை திரும்ப வழங்க கேட்டு சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரர் திரு.இ.மணி அவர்களால் 18.12.2018–ல் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பம் மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| Sl. No. | Name of work | Amount (Rs.) | Register Details |
|---|---|---|---|
| 1 | Construction of drain & culvert at east car street junction & south mada street | 23,742 | 2015-16 P.No.13 |

அலுவலகக் குறிப்பு

மேற்கண்ட விபரப்படி உள்ள 5% காப்புத் தொகை காலங்கடந்த வைப்புத் தொகையாக ரூ.10000/–க்கும் அதிகமாக உள்ளது. எனவே நகராட்சி நடைமுறை நூல் விதி 7(10)(i)( ii)–ன்படி 5% காப்புத் தொகை ரூ.23,742/– மட்டும் ஒப்பந்ததாரர் திரு.E.மணி அவர்களுக்கு திரும்ப வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 60

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

(மதிப்பீட்டு எண் 93/11–12)

---

24) திருநெல்வேலி மாநகராட்சி, திருநெல்வேலி டவுண் உழவர்சந்தை கட்டண கழிப்பிடத்திற்கான தறபோதைய 3 ஆண்டு உரிம காலம் 12.09.2019–லும், டவுண் வடக்கு மவுண்ட் சாலையிலுள்ள கட்டண கழிப்பிடத்திற்கான 3 ஆணடு உரிம காலம் 24.11.2019–லும் முடிவடையவுள்ளதால், மேற்படி உரிமகாலம் முடித்து புதிய உரிமதாரர் தேர்ந்தெடுக்கும் வகைக்கு மேற்படி இரு இனங்களுக்கும் ஒப்படைக்கும் நாள் முதல் 3 ஆண்டு காலத்திற்கு உரிமத்திற்கு விடும் வகைக்கு கடந்த 19.08.2019 அன்று ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதில்

1) திருநெல்வேலி மண்டலத்திற்குட்பட்ட, டவுன் வடக்கு மவுண்ட் சாலையிலுள்ள கட்டண கழிப்பிடத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு கடந்த 19.08.2019 ஆம் தேதி அன்று நடைபெற்ற ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் ஏலத்தில் யாரும் கலந்து கொள்ள வில்லை. ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டவர்கள் விபரம் வருமாறு :

நிர்ணயிக்கப்பட்ட குறுமத் தொகை : ரூ.1,00,000/–

| வ. எண் | ஒப்பந்தப்புள்ளிதாரர் பெயர் மற்றும் முகவரி | செலுத்திய வைப்புத் தொகை | ஏல கேள்வி தொகை |
|---|---|---|---|
| 1 | திரு.ஜி.பாலசுப்பிரமணியன்<br>த/பெ. வி.கணேசன்<br>13ஏ சங்கரன்கோவில் ரோடு,<br>திருநெல்வேலி டவுண் | வைப்பு தொகை ரூ.25000/–<br>ப.சீ.எண்.<br>146–11–12–1920–0004795<br>நாள்: 14.08.2019 | ரூ.1,10,500/– |
| 2 | திரு.எஸ்.ராஜ்<br>த/பெ. ஆர்.சிவசுப்பிரமணியன்<br>2டி திருவள்ளுவர் தெரு<br>திருநெல்வேலி டவுண் | வைப்பு தொகை ரூ.25000/–<br>தமிழ்நாடு மெர்க்கண்டைல் பாங்க்<br>டி.டி.எண். 157011, நாள் 14.08.19<br>மற்றும் கூடுதல் வைப்பு தொகை<br>தமிழ்நாடு மெர்கண்டைல் பாங்க்<br>157012, நாள் 14.08.19 | ரூ.1,05,000/– |

மேற்கண்ட விபரப்படி, டவுன் வடக்கு மவுண்ட் சாலையில் உள்ள கட்டண கழிப்பிடத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் திரு.ஜி.பாலசுப்பிரமணியன் என்பவர் கொடுத்துள்ள ரூ.1,10,500/–க்கான உயர் ஒப்பந்தப்புள்ளி தொகையானது நிர்ணயிக்கப்பட்ட குறுமத் தொகையை விட ரூ.10,500/– கூடுதலாக இருப்பதால், அதனை ஏற்பது குறித்து மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்

2) திருநெல்வேலி மண்டலத்திற்குட்பட்ட கண்டியப்பேரி உழவர்சந்தை கட்டண கழிப்பிடத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு கடந்த 19.08.2019 ஆம் தேதி அன்று நடைபெற்ற ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் ஏலத்தில் யாரும் கலந்து கொள்ள வில்லை. ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டவர்கள் விபரம் வருமாறு :

நிர்ணயிக்கப்பட்ட குறுமத் தொகை : ரூ.1,00,000/–

ஓப்பந்தப்புள்ளி விபரம் :

| வ. எண் | ஒப்பந்தப்புள்ளிதாரர் பெயர் மற்றும் முகவரி | செலுத்திய வைப்புத் தொகை | ஏல கேள்வி தொகை |
|---|---|---|---|
| 1 | திரு.எஸ்.ராஜ்<br>த/பெ. ஆர்.சிவசுப்பிரமணியன்<br>2 டி. திருவள்ளுவர் தெரு<br>திருநெல்வேலி டவுண் | வைப்பு தொகை ரூ.15000/–<br>ப.சீ.எண்.<br>146–11–12–1920–0004793<br>நாள் 14.08.2019 | ரூ.1,21,500/– |
| 2 | திரு.ஜி.பாலசுப்பிரமணியன்<br>த/பெ. வி.கணேசன்<br>13ஏ சங்கரன்கோவில் ரோடு,<br>திருநெல்வேலி டவுண் | வைப்பு தொகை ரூ.25000<br>தமிழ்நாடு மெர்கண்டைல் பாங்க்<br>157009, நாள் 14.08.2019<br>கூடுதல் வைப்பு தொகை<br>டிடிஎண். 157010, 14.08.19 | ரூ.1,06,500/– |

மேற்கண்ட விபரப்படி, உழவர்சந்தையில் உள்ள கட்டண கழிப்பிடத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் திரு.எஸ்.ராஜ், என்பவர் கொடுத்துள்ள ரூ.1,21,500/–க்கான உயர் ஒப்பந்தப்புள்ளி தொகையானது நிர்ணயிக்கப்பட்ட குறுமத் தொகையை விட ரூ.21,500/– கூடுதலாக இருப்பதால், அதனை ஏற்பது குறித்து மாமன்றத்தின் பார்வைக்கு மற்றும் முடிவிற்கு

அலுவலகக் குறிப்பு :

மேலே பொருளில் காணும் விபரப்படி

1) டவுண் வடக்கு மவுண்ட் சாலையில் உள்ள கட்டண கழிப்பிடத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு உயர் ஒப்பந்தப்புள்ளி தொகையாக ரூ.1,10,500/–க்கு ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.ஜி.பாலசுப்பிரமணியன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் ஒப்புக்கொள்ளவும்

2) கண்டியப்பேரி உழவர் சந்தையில் உள்ள கட்டண கழிப்பிடத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு உயர் ஒப்பந்தப்புள்ளி தொகையாக ரூ.1,21,500/–க்கு ஒப்புந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.எஸ்.ராஜ் என்பவரின் ஒப்புந்தப்புள்ளியை மாமன்றம் ஒப்பு கொள்ளவும் , மேற்படி இரு இனங்களையும் ஒப்படைக்கும் நாள் முதல் 3 ஆண்டு காலத்திற்கு மேற்படி நபர்களுக்கு உரிமத்திற்கு விடவும் மாமன்றம் தீர்மானிக்கலாம்.

தீர்மானம் எண் 61

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

(ந.க.எண் 1959/2018/அ1–திலி)

---

25) திருநெல்வேலி மாநகராட்சி, தச்சநல்லூர் மண்டல அலுவலகம், 2019–2022–ம் ஆண்டிற்கு ஒப்படைக்கப்படும் நாள் முதல் மூன்றாண்டுகளுக்கு உரிம இனங்களுக்கு 21.08.2019 அன்று நடைபெற்ற பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளியில் தச்சநல்லூர் மண்டல அலுவலகத்திற்குட்பட்ட பகுதிகளில் மீன் விற்பனை செய்பவர்களிடம் நிர்ணயிக்கப்பட்ட கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு ஏலத்தில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை. ஒப்பந்தப்புள்ளியில் இருவர் கலந்து கொண்டனர். திரு.சங்கரநாராயணன் என்பவர் உச்ச ஒப்பந்தப்புள்ளி தொகையாக ரூ.126000/– கேட்டுள்ளார். திரு.மதன்குமார் என்பவர் ரூ.124000/– ஒப்பந்தப்புள்ளி தொகையாக கேட்டுள்ளார். திரு.சங்கரநாராயணன் என்பவரின் உச்ச ஒப்பந்தப்புள்ளி தொகையானது, திரு.மதன்குமார் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி தொகையை விட ரூ.2000/– கூடுதலாகவும், குறுமத்தொகையைவிட ரூ.2300/– கூடுதலாகவும் உள்ளது. எனவே மேற்படி உரிம இனத்திற்கு அரசாணை எண் 78, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 25.05.2009–ன்படி மேற்படி உரிம இனத்தினை ஒப்படைக்கும் நாள் முதல் மூன்றாண்டுகளுக்கு அனுபவித்து கொள்ள உரிமம் வழங்குவது குறித்து மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

அலுவலகக் குறிப்பு

திருநெல்வேலி மாநகராட்சி, தச்சநல்லூர் மண்டல அலுவலகத்தில் 21.08.2019 அன்று நடைபெற்ற பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளியில் தச்சநல்லூர் மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில் மீன் விற்பனை செய்பவர்களிடம் நிர்ணயிக்கப்பட்ட கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு திரு.சங்கரநாராயணன் என்பவர் உச்ச ஒப்பந்தப்புள்ளி தொகையாக ரூ.126000/– கேட்டுள்ளார். திரு.மதன்குமார் என்பவர் ரூ.124000/– ஒப்பந்தப்புள்ளி தொகையாக கேட்டுள்ளார். திரு.சங்கரநாராயணன் என்பவரின் உச்ச ஒப்பந்தப்புள்ளி தொகையானது திரு.மதன்குமார் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி தொகையை விட ரூ.2000/– கூடுதலாகவும் குறுமத்தொகையை விட ரூ.2300/– கூடுதலாகும். மேலும் இவ்வினத்திற்கு 6வது முறையாக கோரப்பட்ட பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி வாயிலாகவே இத்தகைய உச்ச கேள்வி வரப்பெற்றுள்ளதால் அதனை ஏற்று

தரு.சங்கரநாராயணன் என்பவருக்கு மேற்கண்ட உரிமத்தினை அரசாணை எண் 78, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 25.05.2009–ன்படி ஒப்படைக்கும் நாள் முதல் மூன்றாண்டு காலத்திற்கு வழங்கிட மாமன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 62

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

(ந.க.எண் அ1/5689/2018–தச்சை)

---

26) திருநெல்வேலி மாநகராட்சியில் குடிநீர் மேம்பாட்டு திட்டப் பணிகள், பாதாள சாக்கடை திட்டப் பணிகள் ஆகியவற்றை நிறைவேற்றியதில் அதிகமான சாலை உடைப்புகள் ஏற்பட்டமையாலும் மற்றும் மழையினால் சாலைகள் மிகவும் சேதமடைந்தமையாலும் பொதுமக்கள் மற்றும் போக்குவரத்து நலன் கருதி, தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உட்கட்டமைப்பு திட்டம் 2019–2020–ன் கீழ், மாநகராட்சி பகுதிகளில் உள்ள கீழ்க்காணும் 10 எண்ணம் பழுதடைந்த தார்ச்சாலைகளை 10.125 கிலோ மீட்டர் நீளத்திற்கு ரூ.7.00 கோடி மதிப்பீட்டில் அபிவிருத்தி செய்து கொள்வதற்கு, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு பிரேரணை சமர்ப்பித்ததில், மேற்கண்ட திட்டத்தின் கீழ் சாலைகளை மேம்படுத்துவதற்கு மாமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றி, அதனை நிர்வாக அனுமதி பெறும் பொருட்டு நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம் எண் 17349/2019/இ3, நாள் 03.09.2019–ம் தேதிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், மேற்படி திட்டப்பணிக்கு கீழ்க்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

| வ. எண். | விபரம் | தொகை (ரூ.கோடியில்) |
|---|---|---|
| 1 | TURIP | 1.00 |
| 2 | State Finance Commission / Central Finance Commission / Land regularization Fund | 4.00 |
| 3 | ULB Contribution | 2.00 |
| | மொத்தம் | **7.00** |

மேற்படி தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உட்கட்டமைப்பு திட்டம் 2019–2020–ன் கீழ், மேற்கொள்ளப்பட உள்ள சாலைப் பணிகளின் விபரம் பின்வருமாறு:–

| வ. எண். | பணியின் விபரம் | மதிப்பீடு தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | (1) வார்டு எண்.1 சிதம்பரநகர் வடக்குப் பகுதியில் தார்த்தளம் அமைத்தல் (2) வார்டு எண்.1 சிதம்பரநகர் தெற்கு பகுதியில் தார்த்தளம் அமைத்தல் (3) வார்டு எண்.1 நல்மேய்ப்பர் நகரில் தார்த்தளம் அமைத்தல் (4) வார்டு எண்.1 செல்வ விக்னேஷ் நகரில் தார்த்தளம் அமைத்தல் (5) வார்டு எண்.1 செல்வ விக்னேஷ் நகர் குறுக்கு தெருக்களில் தார்த்தளம் அமைத்தல். (6) வார்டு எண்.48 ஆர்.எம்.கே. விஸ்வநாத நகரில் | ரூ.700.00 |

| | | |
|---|---|---|
| | தார்த்தளம் அமைத்தல் (7) வார்டு எண்.48 ரயில் நகதல் தார்த்தளம் அமைத்தல். (8) வார்டு எண்.50 சேக்மதார் நகர் குறுக்கு தெருக்களில் தார்த்தளம் அமைத்தல். (9) வார்டு எண் 50 காந்திநகர் குறுக்கு தெருக்களில் தார்த்தளம் அமைத்தல் (10) வார்டு எண் 50 சி.எஸ்.எஸ்.நகர் குறுக்கு தெருக்களில் தார்த்தளம் அமைத்தல் | |

மேற்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பழுதடைந்த தார்ச்சாலைகளை தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உட்கட்டமைப்பு திட்டம் 2019–20 ன் கீழ் ரூ.7.00 கோடி மதிப்பீட்டில்; தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் மற்றும் விதிகளின்படி சிப்பம் முறையில் நிறைவேற்றி கொள்வதற்கும், அனுமதிக்கப்பட்டுள்ள தொகை ரூ.7.00 கோடியில் பணி மேற்கொள்ளவும் மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் .

அலுவலகக்குறிப்பு:

பொருளில் குறிப்பிட்டுள்ளவாறு, திருநெல்வேலி மாநகராட்சியில் குடிநீர் மேம்பாட்டு திட்டப் பணிகள், பாதாள சாக்கடை திட்டப் பணிகள் ஆகியவற்றை நிறைவேற்றியதில் அதிகமான சாலை உடைப்புகள் ஏற்பட்டமையாலும் மற்றும் மழையினால் சாலைகள் மிகவும் சேதமடைந்தமையாலும் பொதுமக்கள் மற்றும் போக்குவரத்து நலன் கருதி தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உட்கட்டமைப்பு திட்டம் 2019–20 ன் கீழ், பழுதடைந்த தார்ச்சாலைகளை 10.125 கிலோ மீட்டர் நீளத்திற்கு ரூ.7.00 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் மற்றும் விதிகளின்படி சிப்பம் முறையில் நிறைவேற்றி கொள்வதற்கும், அனுமதிக்கப்பட்டுள்ள தொகை ரூ.7.00 கோடியில் பணி மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 63

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

(ந.க.எண்.இ1/6383/2019)

---

27) திருநெல்வேலி மாவட்ட அரசிதழ் எண் 4, நாள் 14.12.2018ல் திருநெல்வேலி மாநகராட்சியில் 55 வார்டுகளை மறுவரையறை செய்யப்பட்ட விபரங்கள் வெளியிடப்பட்டது. 55 வார்டுகளுக்கு நான்கு எல்கைகள் மறுவரையறை செய்யப்பட்டுள்ளதால் ஏற்கனவே அமையப்பெற்ற மண்டல அலுவலகங்களிலும் மாறுதல்கள் ஏற்பட்டுள்ளது.

எனவே திருநெல்வேலி மாநகராட்சியில் மறுவரையறை செய்யப்பட்ட வார்டுகளை ஒருங்கிணைத்து கீழ்க்கண்டவாறு மண்டல அலுவலகங்கள் அமைக்கலாம்.

| வ.எண் | மண்டலத்தின் பெயர் | வார்டுகள் விபரம் |
|---|---|---|
| 1 | தச்சநல்லூர் மண்டலம் | 1, 2, 3, 4, 10, 11, 12, 13,1 4, 29, 30 மற்றும் 31 (12 வார்டுகள்) |
| 2 | பாளையகோட்டை மண்டலம் | 5, 6, 7, 8, 9, 32, 33, 34, 35, 36, 37, 38, 39 மற்றும் 55 |
| 3 | மேலப்பாளையம் மண்டலம் | 40, 41, 42, 43, 44, 45, 46, 47, 48, 49, 50, 51, 52, 53, 54 (15 வார்டுகள்) |

| | | |
|---|---|---|
| 4 | திருநெல்வேலி மண்டலம் | 15, 16, 17, 18, 19, 20, 21, 22, 23, 24, 25, 26, 27, 28 (14 வார்டுகள்) |

மேற்கண்ட விபரப்படி திருநெல்வேலி மாநகராட்சியில் வார்டுகள் ஒருங்கிணைத்து அமைக்கப்பட்டுள்ள மண்டலங்களின் விபரங்களை அரசின் ஒப்புதல் பெற மாமன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

திருநெல்வேலி மாநகராட்சியில் பொருளில் கண்டுள்ளவாறு வார்டுகள் ஒருங்கிணைத்து அமைக்கப்பட்டுள்ள மண்டலங்களின் விபரங்களை அரசின் ஒப்புதல் பெற மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 64

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

(ந.க.எண் சி1/1398/2017)

---

28) திருநெல்வேலி மாநகராட்சியில் கல்வி நிதியின் கீழ், திருநெல்வேலி மண்டலம் வார்டு எண் 42, கல்லணை மாநகராட்சி பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் வடமேற்கு பகுதியில் கூடுதலாக கழி;ப்பிடம் அமைக்கும் பணிக்கு மாமன்றத் தீர்மானம் எண் 210. நாள் 27.02.2019–ல் ரூ.100.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதின்படி மேற்படி பணிக்கு மின்னணு மற்றும் மூடி முத்திரையிடப்பட்ட இரு உறை முறையிலான ஒப்பந்தப்புள்ளிகள் பெறுவதற்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண் 46/2018–19–ன்படி மாநில அளவில் Deccan Chronicle ஆங்கில நாளிதழிலும், தினச்செய்தி தமிழ் நாளிதழின் அனைத்துப் பதிப்புகளிலும் மற்றும் மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரிலும் 07.03.2019 –ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு பிரசுரம் செய்துள்ளதின்படி 26.03.2019–ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் மின்னணு முறையில் ஒப்பந்தப்புள்ளி ஏதும் வரப்பெறவில்லை. மின்னணு முறையில்லாத இரு உறை முறையில் M/s.R.R.Builders மற்றும் திரு.எஸ்.கண்ணன் ஆகிய இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்று இம்மாநகராட்சி ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழுவால் தொழில் நுட்ப தகுதி தொடர்பான நிபந்தனைகளை கூர்ந்தாய்வு செய்ததில் மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுமே தொழில்நுட்ப தகுதி தொடர்பான நிபந்தனைகளை பூர்த்தி செய்வதால் அன்னார்களது விலைப்புள்ளி அட்டவணைகள் 22.08.2019 ல் திறக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு அதன் விபரம் வருமாறு:–

| வ. எண் | பணியின் பெயர் | பணியின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு | M/s.R.R.Builders நிறுவனத்தின் ஒப்ப்நதப்புள்ளி மதிப்பு | திரு.எஸ்கண்ணன் ஒப்பந்தக்காரரின் ஒப்ப்நதப்புள்ளி மதிப்பு |
|---|---|---|---|---|
| 1 | திருநெல்வேலி மாநகராட்சியில் திருநெல்வேலி மண்டலம் வார்டு எண்.42 கல்லணை மாநகராட்சி பெண்கள் | ரூ.95,45,795/– | ரூ. 1,02,54,263/– மதிப்பீட்டை விட 7.42% அதிகம் | ரூ. 1,06,64,142/– மதிப்பீட்டை விட 11.72% அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | மேல்நிலைப் பள்ளியில் வடமேற்கு பகுதியில் கூடுதலாக கழிப்பிடம் அமைத்தல் | | | |

ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/s.R.R.Builders நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ.1,02,54,263/– ஆனது மதிப்பீட்டை விட 7.42% அதிகமாக உள்ளதால் இது ஏற்கதக்கதல்ல என கருதி ஒப்பந்ததாரரை விலைகுறைப்பு பேச்சு வார்த்தைக்கு அழைக்க 22.08.2019 அன்று கடிதம் அனுப்பப்பட்டது. அதன் பின்னர் ஒப்பந்ததாரர் தமது 26.08.2019–ம் தேதிய கடிதத்தில், இவ்வலுவலகத்திலிருந்து விலைக்குறைப்பு பேச்சு வார்த்தைக்கு அழைக்கப்பட்டதனை ஏற்று ஏற்கனவே ஒப்பந்தப்புள்ளியில் கொடுத்த மதிப்பீட்டை விட 7.42% அதிகமான விலை விகிதத்திலிருந்து குறைத்து மதிப்பீட்டை விட 4.95% அதிகமான விலைவிகிதத்தில் மேற்படி பணியை செய்ய ஒப்புக்கொண்டுள்ளார். இருப்பினும் ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு M/s.R.R.Builders நிறுவனத்தின் முதலாவது விலைக்குறைப்பு பேச்சுவார்த்தையில் கொடுத்துள்ள தொகை ரூ.1,00,18,312/– ஆனது மதிப்பீட்டை விட 4.95% அதிகமாக உள்ளதால் இது ஏற்கதக்கதல்ல என கருதி ஒப்பந்ததாரரை மீண்டும் விலைகுறைப்பு பேச்சு வார்த்தைக்கு அழைக்க 26.08.2019 அன்று கடிதம் அனுப்பப்பட்டது. அதன் பின்னர் ஒப்பந்ததாரர் தமது 30.08.2019–ம் தேதிய கடிதத்தில், இவ்வலுவலகத்திலிருந்து விலைக்குறைப்பு பேச்சு வார்த்தைக்கு அழைக்கப்பட்டதனை ஏற்று தற்போது மேற்படி பணிக்கு தேவையான கட்டிடப் பொருட்கள், குறிப்பாக எரிபொருள் மற்றும் வேலை ஆட்களுக்கான கூலி ஆகியவை சந்தையில் எதிர்பாராதவிதமாக அதிகமாகிவிட்டபடியால் மேலும் விலைக்குறைப்பு செய்ய இயலாது என இறுதியாகவும், முடிவாகவும் தெரிவித்துள்ளார்.

எனவே, 30.08.2019–ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கையில் M/s.R.R.Builders நிறுவனத்தின் இரண்டாவது விலைக்குறைப்பு பேச்சுவார்த்தைக்குப் பின் வரும் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ.1,00,18,312/– மதிப்பீட்டை விட 4.95% கூடுதலான ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் முடிவு செய்யலாம் என பரிந்துரை செய்துள்ளதின்படி மாமன்றத்தின் அனுமதிக்கும் முடிவிற்கும்.

அலுவலகக் குறிப்பு:

அ) திருநெல்வேலி மாநகராட்சியில் திருநெல்வேலி வார்டு எண்.42 கல்லணை மாநகராட்சி பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் வடமேற்கு பகுதியில் கூடுதலாக கழி;ப்பிடம் அமைக்கும் பணி அத்தியாவசியமான பணியாக இருப்பதாலும், பள்ளி குழந்தைகளின் சுகாதார நலன் கருதி மேற்படி பணியினை அவசியமாக மேற்கொள்ள வேண்டியிருப்பதாலும், தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கான பொறியியல் நடைமுறை நூல் தொகுப்பு–1, அத்தியாயம் 2, உட்பிரிவு 2.7.2–ன்படி ஒப்பந்தப்புள்ளி முதல் அழைப்பில் கூட மதிப்பீட்டை விட 5% வரை கூடுதலாக பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்புக் கொள்வதற்கு மாமன்றம் அனுமதிக்கலாம் என வழிவகை செய்யப்பட்டுள்ளதாலும், 30.08.2019–ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கையில் M/s.R.R.Builders நிறுவனத்தின் இரண்டாவது விலைக்குறைப்பு பேச்சுவார்த்தைக்குப் பின் வரும் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ.1,00,18,312/– மதிப்பீட்டை விட 4.95% கூடுதலான ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் முடிவு செய்யலாம் என பரிந்துரை செய்துள்ளதின்படி மாமன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 65

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

(மதிப்பீடு எண் 168/2018–19 (திலி))

29) திருநெல்வேலி மாநகராட்சியில் கல்வி நிதியின் கீழ், திருநெல்வேலி மண்டலம் வார்டு எண் 44, கல்லணை மாநகராட்சி பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் பழைய வளாகத்தின் வடமேற்கு பகுதியில் உள்ள சேதமடைந்த வகுப்பறைகளை இடித்து அப்புறப்படுத்தி புதிதாக வகுப்பறை கட்டிடம் கட்டும் பணிக்கு மாமன்றத் தீர்மானம் எண் 209. நாள் 27.02.2019–ல் ரூ.100.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதின்படி மேற்படி பணிக்கு மின்னனு மற்றும் மூடி முத்திரையிடப்பட்ட இரு உறை முறையிலான ஒப்பந்தப்புள்ளிகள் பெறுவதற்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண் 46/2018–19–ன்படி மாநில அளவில் Deccan Chronicle ஆங்கில நாளிதழிலும், தினச்செய்தி தமிழ் நாளிதழின் அனைத்துப் பதிப்புகளிலும் மற்றும் மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரிலும் 07.03.2019–ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு பிரசுரம் செய்துள்ளதின்படி 26.03.2019–ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் மின்னனு முறையில் ஒப்பந்தப்புள்ளி ஏதும் வரப்பெறவில்லை. மின்னனு முறையில்லாத இரு உறை முறையில் திருமதி.க.அமராவதி மற்றும் திரு.எஸ்.கண்ணன் ஆகிய இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்று இம்மாநகராட்சி ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழுவால் தொழில் நுட்ப தகுதி தொடர்பான நிபந்தனைகளை கூர்ந்தாய்வு செய்ததில் திருமதி.க.அமராவதி ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளி தொழில்நுட்ப தகுதி தொடர்பான நிபந்தனைகளை பூர்த்தி செய்யாததால் அன்னாரது ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்பட்டது. மீதமுள்ள ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளியான திரு.எஸ்.கண்ணன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி தொழில்நுட்ப தகுதி தொடர்பான நிபந்தனைகளை பூர்த்தி செய்ததால் அன்னாரது விலைப்புள்ளி அட்டவணை 22.08.2019 ல் திறக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு அதன் விபரம் வருமாறு:–

| வ. எண் | பணியின் பெயர் | பணியின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு | திரு.எஸ்கண்ணன் ஒப்பந்தக்காரரின் ஒப்ப்நதப்புள்ளி மதிப்பு |
|---|---|---|---|
| 1 | திருநெல்வேலி மண்டலம் வார்டு எண் 44, கல்லணை மாநகராட்சி பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் பழைய வளாகத்தின் வடமேற்கு பகுதியில் உள்ள சேதமடைந்த வகுப்பறைகளை இடித்து அப்புறப்படுத்தி புதிதாக வகுப்பறை கட்டிடம் கட்டும் பணி செய்தல் | ரூ.98,01,799/– | ரூ.1,03,40,871/– மதிப்பீட்டை விட 5.50% அதிகம் |

ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.எஸ்கண்ணன் ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ.1,03,40,871/– ஆனது மதிப்பீட்டை விட 5.50% அதிகமாக உள்ளதால் இது ஏற்கதக்கதல்ல என கருதி ஒப்பந்ததாரரை விலைகுறைப்பு பேச்சு வார்த்தைக்கு அழைக்க 22.08.2019 அன்று கடிதம் அனுப்பப்பட்டது. அதன் பின்னர் ஒப்பந்ததாரர் தமது 26.08.2019–ம் தேதிய கடிதத்தில்,

இவ்வலுவலகத்திலிருந்து விலைக்குறைப்பு பேச்சு வார்த்தைக்கு அழைக்கப்பட்டதனை ஏற்று ஏற்கனவே ஒப்பந்தப்புள்ளியில் கொடுத்த மதிப்பீட்டை விட 5.50% அதிகமான விலை விகிதத்திலிருந்து குறைத்து மதிப்பீட்டை விட 4.95% அதிகமான விலைவிகிதத்தில் மேற்படி பணியை செய்ய ஒப்புக்கொண்டுள்ளார். இருப்பினும் ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு திரு.எஸ்கண்ணன் ஒப்பந்தக்காரரின் முதலாவது விலைக்குறைப்பு பேச்சுவார்த்தையில் கொடுத்துள்ள தொகை ரூ.1,02,86,988/– ஆனது மதிப்பீட்டை விட 4.95% அதிகமாக உள்ளதால் இது ஏற்கதக்கதல்ல என கருதி ஒப்பந்ததாரரை மீண்டும் விலைகுறைப்பு பேச்சு வார்த்தைக்கு அழைக்க 26.08.2019 அன்று கடிதம் அனுப்பப்பட்டது. அதன் பின்னர் ஒப்பந்ததாரர் தமது 30.08.2019–ம் தேதிய கடிதத்தில், இவ்வலுவலகத்திலிருந்து விலைக்குறைப்பு பேச்சு வார்த்தைக்கு அழைக்கப்பட்டதனை ஏற்று தற்போது மேற்படி பணிக்கு தேவையான கட்டிடப் பொருட்கள், குறிப்பாக எரிபொருள் மற்றும் வேலை ஆட்களுக்கான கூலி ஆகியவை சந்தையில் எதிர்பாராதவிதமாக அதிகமாகிவிட்டபடியால் மேலும் விலைக்குறைப்பு செய்ய இயலாது என இறுதியாகவும், முடிவாகவும் தெரிவித்துள்ளார்.

எனவே, 30.08.2019–ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கையில் திரு.எஸ்கண்ணன் ஒப்பந்தக்காரரின் இரண்டாவது விலைக்குறைப்பு பேச்சுவார்த்தைக்குப் பின் வரும் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ.1,02,86,988/– மதிப்பீட்டை விட 4.95% கூடுதலான ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் முடிவு செய்யலாம் என பரிந்துரை செய்துள்ளதின்படி மாமன்றத்தின் அனுமதிக்கும் முடிவிற்கும்.

அலுவலகக் குறிப்பு:

அ) திருநெல்வேலி மாநகராட்சியில் திருநெல்வேலி வார்டு எண்.44 கல்லணை மாநகராட்சி பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் பழைய வளாகத்தின் வடமேற்கு பகுதியில் உள்ள சேதமடைந்த வகுப்பறைகளை இடித்து அப்புறப்படுத்தி புதிதாக வகுப்பறை கட்டிடம் கட்டும் பணி அத்தியாவசியமான பணியாக இருப்பதாலும், பள்ளி குழந்தைகளின் சுகாதார நலன் கருதி மேற்படி பணியினை அவசியமாக மேற்கொள்ள வேண்டியிருப்பதாலும், தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கான பொறியியல் நடைமுறை நூல் தொகுப்பு–1, அத்தியாயம் 2, உட்பிரிவு 2.7.2–ன்படி ஒப்பந்தப்புள்ளி முதல் அழைப்பில் கூட மதிப்பீட்டை விட 5% வரை கூடுதலாக பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்புக் கொள்வதற்கு மாமன்றம் அனுமதிக்கலாம் என வழிவகை செய்யப்பட்டுள்ளதாலும், 30.08.2019–ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கையில் திரு.எஸ்கண்ணன் ஒப்பந்தக்காரரின் இரண்டாவது விலைக்குறைப்பு பேச்சுவார்த்தைக்குப் பின் வரும் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ.1,02,86,988/– மதிப்பீட்டை விட 4.95% கூடுதலான ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் முடிவு செய்யலாம் என பரிந்துரை செய்துள்ளதின்படி மாமன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 66

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

(மதிப்பீடு எண் 169/2018–19 (திலி))

---

30) திருநெல்வேலி மாநகராட்சியில் கல்வி நிதியின் கீழ், திருநெல்வேலி மண்டலம் வார்டு எண் 42, கல்லணை மாநகராட்சி பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் பழைய வளாகத்தின் தென்மேற்கு பகுதியில் உள்ள சேதமடைந்த வகுப்பறைகளை இடித்து அப்புறப்படுத்தி புதிதாக வகுப்பறை கட்டிடம் கட்டும் பணிக்கு மாமன்றத் தீர்மானம் எண் 208, நாள் 27.02.2019–ல் ரூ.100.00

இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதின்படி மேற்படி பணிக்கு மின்னணு மற்றும் மூடி முத்திரையிடப்பட்ட இரு உறை முறையிலான ஒப்பந்தப்புள்ளிகள் பெறுவதற்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண் 46/2018–19–ன்படி மாநில அளவில் Deccan Chronicle ஆங்கில நாளிதழிலும், தினச்செய்தி தமிழ் நாளிதழின் அனைத்துப் பதிப்புகளிலும் மற்றும் மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரிலும் 07.03.2019–ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு பிரசுரம் செய்துள்ளதின்படி 26.03.2019–ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் மின்னணு முறையில் ஒப்பந்தப்புள்ளி ஏதும் வரப்பெறவில்லை. மின்னணு முறையில்லாத இரு உறை முறையில் திருமதி.க.அமராவதி மற்றும் திரு.எஸ்.கண்ணன் ஆகிய இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்று இம்மாநகராட்சி ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழுவால் தொழில்நுட்ப தகுதி தொடர்பான நிபந்தனைகளை கூர்ந்தாய்வு செய்ததில் திருமதி.க.அமராவதி ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளி தொழில்நுட்ப தகுதி தொடர்பான நிபந்தனைகளை பூர்த்தி செய்யாததால் அன்னாரது ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்பட்டது. மீதமுள்ள ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளியான திரு.எஸ்.கண்ணன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி தொழில்நுட்ப தகுதி தொடர்பான நிபந்தனைகளை பூர்த்தி செய்ததால் அன்னாரது விலைப்புள்ளி அட்டவணை 22.08.2019 ல் திறக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு அதன் விபரம் வருமாறு:–

| வ. எண் | பணியின் பெயர் | பணியின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு | திரு.எஸ்கண்ணன் ஒப்பந்தக்காரரின் ஒப்ப்நதப்புள்ளி மதிப்பு |
|---|---|---|---|
| 1 | திருநெல்வேலி மண்டலம் வார்டு எண் 42, கல்லணை மாநகராட்சி பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் பழைய வளாகத்தின் தென்மேற்கு பகுதியில் உள்ள சேதமடைந்த வகுப்பறைகளை இடித்து அப்புறப்படுத்தி புதிதாக வகுப்பறை கட்டிடம் கட்டும் பணி செய்தல் | ரூ.98,01,799/– | ரூ.1,03,70,343/– மதிப்பீட்டை விட 5.80% அதிகம் |

ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு மேற்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.எஸ்கண்ணன் ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ.1,03,70,343/– ஆனது மதிப்பீட்டை விட 5.80% அதிகமாக உள்ளதால் இது ஏற்கதக்கதல்ல என கருதி ஒப்பந்ததாரரை விலைகுறைப்பு பேச்சு வார்த்தைக்கு அழைக்க 22.08.2019 அன்று கடிதம் அனுப்பப்பட்டது. அதன் பின்னர் ஒப்பந்ததாரர் தமது 26.08.2019–ம் தேதிய கடிதத்தில், இவ்வலுவலகத்திலிருந்து விலைக்குறைப்பு பேச்சு வார்த்தைக்கு அழைக்கப்பட்டதனை ஏற்று ஏற்கனவே ஒப்பந்தப்புள்ளியில் கொடுத்த மதிப்பீட்டை விட 5.80% அதிகமான விலை விகிதத்திலிருந்து குறைத்து மதிப்பீட்டை விட 4.95% அதிகமான விலைவிகிதத்தில் மேற்படி பணியை செய்ய ஒப்புக்கொண்டுள்ளார். இருப்பினும் ஓப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு திரு.எஸ்கண்ணன் ஒப்பந்தக்காரரின் முதலாவது விலைக்குறைப்பு பேச்சுவார்த்தையில் கொடுத்துள்ள தொகை ரூ.1,02,86,988/– ஆனது மதிப்பீட்டை விட 4.95% அதிகமாக உள்ளதால் இது ஏற்கதக்கதல்ல என கருதி ஒப்பந்ததாரரை மீண்டும் விலைகுறைப்பு பேச்சு வார்த்தைக்கு அழைக்க 26.08.2019 அன்று கடிதம் அனுப்பப்பட்டது. அதன் பின்னர் ஒப்பந்ததாரர் தமது 30.08.2019–ம் தேதிய கடிதத்தில், இவ்வலுவலகத்திலிருந்து விலைக்குறைப்பு பேச்சு வார்த்தைக்கு அழைக்கப்பட்டதனை ஏற்று தற்போது மேற்படி பணிக்கு தேவையான கட்டிடப் பொருட்கள், குறிப்பாக எரிபொருள் மற்றும் வேலை ஆட்களுக்கான கூலி

ஆகியவை சந்தையில் எதிர்பாராதவிதமாக அதிகமாகிவிட்டபடியால் மேலும் விலைக்குறைப்பு செய்ய இயலாது என இறுதியாகவும், முடிவாகவும் தெரிவித்துள்ளார்.

எனவே, 30.08.2019–ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கையில் திரு.எஸ்கண்ணன் ஒப்பந்தக்காரரின் இரண்டாவது விலைக்குறைப்பு பேச்சுவார்த்தைக்குப் பின் வரும் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ.1,02,86,988/– மதிப்பீட்டை விட 4.95% கூடுதலான ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் முடிவு செய்யலாம் என பரிந்துரை செய்துள்ளதின்படி மாமன்றத்தின் அனுமதிக்கும் முடிவிற்கும்.

அலுவலகக் குறிப்பு:

அ) திருநெல்வேலி மாநகராட்சியில் திருநெல்வேலி வார்டு எண் 44, கல்லணை மாநகராட்சி பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் பழைய வளாகத்தின் தென்மேற்கு பகுதியில் உள்ள சேதமடைந்த வகுப்பறைகளை இடித்து அப்புறப்படுத்தி புதிதாக வகுப்பறை கட்டிடம் கட்டும் பணி அத்தியாவசியமான பணியாக இருப்பதாலும், பள்ளி குழந்தைகளின் சுகாதார நலன் கருதி மேற்படி பணியினை அவசியமாக மேற்கொள்ள வேண்டியிருப்பதாலும், தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கான பொறியியல் நடைமுறை நூல் தொகுப்பு–1, அத்தியாயம் 2, உட்பிரிவு 2.7.2–ன்படி ஒப்பந்தப்புள்ளி முதல் அழைப்பில் கூட மதிப்பீட்டை விட 5% வரை கூடுதலாக பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்புக் கொள்வதற்கு மாமன்றம் அனுமதிக்கலாம் என வழிவகை செய்யப்பட்டுள்ளதாலும், 30.08.2019–ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கையில் திரு.எஸ்கண்ணன் ஒப்பந்தக்காரரின் இரண்டாவது விலைக்குறைப்பு பேச்சுவார்த்தைக்குப் பின் வரும் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ.1,02,86,988/– மதிப்பீட்டை விட 4.95% கூடுதலான ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் முடிவு செய்யலாம் என பரிந்துரை செய்துள்ளதின்படி மாமன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 67

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

(மதிப்பீடு எண் 170/2018–19 (திலி))

---